[2018 மே 30

84—

நீதிமன்றத்திற்குக் கட்டடம்

***16888—திரு. அ. ராமு:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் தொகுதி, கோத்தகிரி வட்டம், வருவாய்த் துறை அலுவலகத்தில் இயங்கிவரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்திற்கென புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) குன்னூர் தொகுதிக்குட்பட்ட கோத்தகிரி வருவாய்த் துறை அலுவலகத்தில் இயங்கிவருகின்ற குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான கருத்துரு ஏதும் பெறப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் இதயத்தில் என்றுமே தெய்வமாக வாழ்ந்துகொண்டிருக்கும் காவியத் தலைவி, ஏழைகளின் அன்னை, பாசமிகு அன்புத் தாய், தனக்கென வாழா தியாகத் தலைவி, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை என் நெஞ்சுருக வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுடைய ஆட்சிக்கு எள்ளளவும் குறைவின்றி ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், அவருக்கு உறுதுணையாக நின்று ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

2018 மே 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கையின் நியாயத்தினை அறிந்து, மக்களின் பணியே தனது தலையாய பணி என செயல்பட்டுக் கொண்டிருக்கிறது அம்மாவின் அரசு. 'இல்லை' என்ற சொல்லுக்கே இடமளிக்காமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று உதவிடுமாறு மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோத்தகிரியில் இயங்கி வருகின்ற குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றத்திற்கான புதிய கட்டடம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்கின்ற பணி தற்போது நடைபெற்று வருகிறது. மாவட்ட ஆட்சியர் மூலமாக இடம் தேர்வு செய்யப்பட்டு, நீதித் துறைக்கு அந்த இடம், இடமாற்றம் செய்யப்பட்டு கொடுக்கப்படும் பட்சத்திலே, அதற்கான வரைவுத் திட்டம் மற்றும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும். பின்னர், அரசாங்கத்திற்கு அது வந்தவுடன், அனுமதி பெற்று உடனடியாக அங்கே புதிய நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வட்டாட்சியர் அவர்களை அணுகி விசாரித்தபொழுது, நீதிமன்றம் கட்டுவதற்கான இடம் தயாராக உள்ளது என்று அறிந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, குன்னூர் பகுதியிலே புதியதாகத் திறக்கப்பட்ட சார்பு நீதிமன்றம் தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த நீதிமன்றத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத்*

தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே புதிய ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட நீதிமன்றத்தின்மூலம் உயர் நீதிமன்றத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டு, அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யப்படும்பட்சத்திலே, மாண்புமிகு தமிழக முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று, அங்கே நீதிமன்றம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், சார்பு நீதிமன்றத்திற்குப் புதியதாகக் கட்டடம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருந்தார். அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, உரிய மதிப்பீடுகள் பெறப்பட்டவுடன், கண்டிப்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்த மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியை சிறப்பாக நடத்திவரும், முக்கனிகளுள் சிறந்த கனியாகத் திகழும் சேலத்து மாம்பழத்தின் நாயகன் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், தென்பாண்டிச் சிங்கம் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், எங்கள் கொங்கு நாட்டின் தளபதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

கோவை, மக்கள் அதிகமாக வாழ்கின்ற இடம். அங்கு குதிரை வண்டி கோர்ட் என்ற பகுதியில் மூன்று ஏக்கர் இடம் தற்போது காலியாக இருக்கின்றது. அந்த இடத்தில் ஒரு நீதிமன்ற வளாகத்தைக் கட்டித் தந்தால், தற்போது செயல்படும் நீதிமன்ற வளாகத்தில் இருக்கும் இடநெருக்கடியைத் தவிர்க்கலாம். தற்போது, காலியாகவுள்ள அந்த இடத்தில் புல், புதர் மண்டிக் கிடக்கின்றது. அந்த இடம் சமூக விரோதிகளுக்கு ஏற்ற இடமாக மாறிவிடுவதற்கு முன்பாக, அந்த இடத்தில் அதைக் கட்டித் தந்தால்

2018 மே 30]

மிகவும் நன்றாக இருக்கும். எனவே, இதனைக் கருத்தில்கொண்டு எனது கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்த இடம் காலியாக இருக்கும்பட்சத்தில், அங்கு நீதிமன்ற வளாகம் தேவைப்படுகின்றபட்சத்திலே, உயர் நீதிமன்றத்தின் மூலமாக உரிய கருத்துரு பெறப்பட்டு, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

85—

தரம் உயர்த்துதல்

***14020—திரு. ரா. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, பெரம்பலூர் ஒன்றியம், எளம்பலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பொதுவாக கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துகின்ற அற்புதமான திட்டத்தை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்